## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.96/2022

## சாட்சியின் சான்றுரை DW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | அப்பாதுரை | வட்டம் | - | |
| த/பெ | - | அனந்தநாதநயினார் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

28.03.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
பிரதிவாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். அவர் தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்படுகிறது. கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது.

1. எனது பெயரில் உள்ள பட்டா எண்.15 பிவாசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. என் தந்தை பெயரில் உள்ள பட்ட எண்.24 பிவாசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

அனந்தநாதநியானரும் ஜோதிர்மாலை ஆகியோர் எனது தகப்பனார் மற்றும் தாயார் ஆவார்கள். தகப்பனார் 1998லும் தாயார் 2003லும் இறந்துவிட்டனார் என்றால் சரிதான். நான் அவர்களின் ஒரே மகன் என்றால் சரிதான். நான் தான் வீட்டிற்கு இளையமகன். வாதியும் 2ம் பிரதிவாதி சுதர்சனாவும் என்னுடைய மூத்த சகோதரிகள். இரண்டாவது சகோதரிக்கு மனநிலை, உடல்நிலையும் சரியில்லை என்றால் உடல் நிலை தான் சரியில்லை. மனநிலை நன்றாக தான் உள்ளது. சரிதான். அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். அவர் என் பராமரிப்பில் தான் உள்ளார். அவருக்கு இந்த வழக்கை பற்றி தெரியாது என்றால் சரியல்ல தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் அவர் கையெழுத்து போட்டுள்ளாரா

என்றால் இல்லை. வழக்கை பற்றி தெரியாது என்றால் சரிதான். வழக்கில் மொத்தம் எத்தனை அயிட்டம் உள்ளது என்றால் சுமார் 8 அயிட்டம் இருக்கும். எந்த சொத்தும் என் பெயரிலும் கிரையம் இல்லை என்றால் சரிதான். பட்டா உள்ளது. அனைத்து சொத்துக்களுக்கும் கிரையம் தாயார் பெயரிலும் தகப்பனார் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். 2,4,7,9 அயிட்டம் என்பது சர்வே எண்.119/3, 119/6, 485/6பி, 485/9 அனைத்தும் பாகப்பத்திரத்தில் வா.சா.ஆ.4ல் வரும் சொத்துக்களாகும் என்றால் சரிதான். எனக்கும் என் சகோதரிகளுக்கும் 05.01.2022ல் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரம் தான் வா.சா.ஆ.17 என்றால் சரிதான். அதன் அசல் பாகப்பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தில் வழக்கு சொத்துக்கள் பொறுத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அந்த பாகப்பத்திரத்தில் யார் பாகத்திலும் வைக்கப்படவில்லை என்றாலும் அது காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பட்டா வழக்கு சொத்து அயிட்டம் 7,8க்கு பட்டா 15 எண் ஆகும் என்றால் சரிதான். அது என் பெயரில் உள்ளது என்றாலும் சரிதான். அது பிவாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு அயிட்ட சொத்து எண்.1,2,4,5,6 ஆகிய இனங்கள் பொறுத்தவரை பட்டா எண்.24ல் என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்த பட்டாக்கள் ஏற்கனவே வா.சா.ஆ.8 ஆக என் பெயரிலும் பட்டா எண்.24 எனது தகப்பனார் பெயரிலும் வா.சா.ஆ.9ஆக குறியிடப்பட்டுள்ளது. மற்ற இன சொத்துக்களை பொறுத்து பட்டா எண்.944ல் குறிப்பாக வழக்கு அயிட்ட சொத்து எண்.3, புல எண்.119/4 என் தாயார் பெயரில் உள்ளது. தியாகராஜன் என்பவர் பக்கத்து நிலத்துக்காரர். வழக்கு சொத்து எண்.9, புல எண்.485/9 அது என் தந்தையார் பெயரில் உள்ளது. ஞானபிரகாசம் என்பவர் பக்கத்து நிலத்துக்காரர். அந்த பட்டா ஏற்கனவே

வா.சாஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொதத்துக்கள் அனைத்தையும் நான் தான் அனுபவித்து வருகிறேன். ஆனால் அடங்கலில் என் பெயரிலும் என் தகப்பனார் பெயரிலும் வருகிறது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.590/2021 எனக்கும் இருசம்மாவுக்கும் உள்ள வழக்கு ஆகும். அதில் எத்தனை அயிட்ட சொத்து உள்ளது என்றால் 2 அயிட்ட சொத்து உள்ளது. வழக்கு எண்.7,8ஐ பொறுத்து அந்த வழக்கு. மற்ற சொத்துக்கள் வழக்கில் இல்லை என்றால் சரிதான். புகார் கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனக்கும் என் அக்கா சகுந்தலாவிற்கும் விரோதம் உள்ளதா என்றால் இல்லை. என் அக்கா என்னிடம் பணம் வாங்குவார் என்றால் ஓரளவிற்கு வாங்குவார். நான் பி.எஸ்.சி கணிதம் படித்து அஞ்சல் நிலைய அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். பாகப்பத்திரத்தில் விடுபட்ட சொத்துக்கள் எனக்கு சேரவேண்டும் என்று வாசகம் எழுதவில்லை என்றால் சரிதான். என் சகோதரிக்கும் பங்கு சேரவேண்டும் என்றும் அவருக்கு பங்கு தரமாட்டேன் என்று சொல்வது சரியல்ல என்றால் சரியல்ல. எனக்கும் எனது மைத்துனருக்கும் விரோதம் என்ன என்றால் சாதாரண விரோதம் தான். ஏனென்றால் அவர் சொத்து கேட்பார். அவர் எவ்வளவு கொடுத்தாலும் சொத்தை வாங்கிகொள்வர் என்றால் சரிதான். வாதிக்கு சேரவேண்டிய பாகத்தை நான் கொடுக்க தயாராக உள்ளேன்.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.